දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913

විද්‍යුත් තැපෑල )postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )


සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය )
எனது இல MH/AD/01/09/Add.Se (MS)/2024
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி ) 2024. 10. 15
Date )

# සෞඛ්‍ය අමාත්‍යාංශය
# சுகாதார அமைச்சு
# Ministry of Health

பொது சுற்றறிக்கை கடித இலக்கம்: 02-140/2024

மாகாண சுகாதார செயலாளர்கள்,
பிரதிப் பணிப்பாளர் நாயகங்கள் - தேசிய வைத்தியசாலை (கொழும்பு, கண்டி, கராப்பிட்டிய)
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
போதனா வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள், விஷேட திட்டப் பணிப்பாளர்கள்,
மத்திய அமைச்சின் கீழுள்ள சகல வைத்தியசாலைகளின் மற்றும் நிறுவனத் தலைவர்கள் அனைவருக்கும்.

## மேலதிக செயலாளர் (மருத்துவ சேவை) பதவி
## சுகாதார அமைச்சு

01. சுகாதார அமைச்சில் 2024.08.26 ஆம் திகதியில் வெற்றிடமாக உள்ள மேலதிக செயலாளர் (மருத்துவ சேவை) பதவிக்கு, விண்ணப்பங்கள் கோரப்படும் கடைசி தினத்தன்று தொடர்ச்சியாக சேவையில் உள்ள இலங்கை மருத்துவ சேவையில் சிரேஷ்ட மருத்துவ நிர்வாக தரத்திற்குரிய, பிரதிப் பணிப்பாளர் நாயகம் தரத்திற்குரிய மருத்துவ அலுவலர்கள் மற்றும் அதே தரத்தைச் சேர்ந்த பல் சத்திர சிகிச்சை மருத்துவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

I. அடிப்படைத் தகைமைகள்:

விண்ணப்பங்கள் கோரப்படும் கடைசி தினத்திற்கு தொடர்ச்சியாக சேவையில் உள்ள இலங்கை மருத்துவ சேவையின் சிரேஷ்ட மருத்துவ நிர்வாக தரத்தைச் சேர்ந்த அல்லது பிரதிப் பணிப்பாளர் நாயகம் தரத்தைச் சேர்ந்த மருத்துவ அலுவலராக இருத்தல் அல்லது அதே தரத்தில் பதவி வகிக்கும் பல் சத்திர சிகிச்சை மருத்துவராக இருத்தல்.

02. சேவை விதிமுறைகளும் நிபந்தனைகளும்:

இப்பதவிக்கு தெரிவுசெய்யப்படும் மருத்துவ அலுவலர்கள் தனியார் மருத்துவ தொழிலில் ஈடுபட முடியாது

03. சம்பளத் திட்டம்:

(அ) இப்பதவிக்கு அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன்படி SL – 03 – 2016 சம்பள பிரிவின் படி நிலை I (ரூபா 88,000 – 12 X 2,700 - 120,400 ) உரித்தாகும்.

(ஆ) பட்டப்பின்படிப்பு தகைமைகளைக்கொண்ட மருத்துவ நிர்வாக தர அலுவலர்களுக்கு மாதாந்தம் ரூபா 6000/- வீதம் மருத்துவ நிருவாக படிக் கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

04. ஆட்சேர்ப்பு முறை:

(அ) அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளி வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் வெற்றிடம் நிரப்பப்படும்.

(ஆ) நேர்முகப் பரீட்சையில் பயன்படுத்தப்படும் புள்ளித் திட்டம் இணைப்பு I என இணைக்கப்பட்டுள்ளது.

05. விண்ணப்பிக்கும் முறை:

(அ) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்தின்படி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **2024.10. 30** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு நிறுவனங்களின் தலைவர்கள் அல்லது பன்முகப்படுத்தப்பட்ட பிரிவுகள்/விஷேட திட்ட பணிப்பாளர்கள் ஊடாக **செயலாளர், சுகாதார அமைச்சு, "சுவசிறிபாய" , 385, சங்கைக்குரிய விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு** 10 எனும் முகவரிக்கு **பதிவு தபால் மூலம்** அனுப்ப வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பிறகு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(இ) தமது விண்ணப்பத்தை திரும்பப்பெற விரும்பினால், விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தில் இருந்து 03 வாரங்களுக்குள் எனக்கு அறிவிப்பதன் மூலம் திரும்ப பெற முடியும்.

06. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 2014.10.11 ஆம் திகதிய 1883/17 எனும் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக வெளியிடப்பட்ட இலங்கை சுகாதார சேவையின் மருத்துவ சேவை பிரமாணக்குறிப்பு மற்றும் அதில் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட திருத்த ஏற்பாடுகள், அரசாங்க பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு தொடர்பான அரச சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிக் கோவை பாகம் I இன் பொது நிபந்தனைகள் மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவையில் உள்ளடக்கப்பட்ட நிபந்தனைகள் என்பவற்றுக்கு உங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

07. இந்த அறிவித்தலில் சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளுக்கிடையே ஏதாவது முரண்பாடுகள் அல்லது வேறுபாடுகள் இருந்தால், அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியிலான அறிவித்தல் சரியானதாகக் கொள்ளப்படும்.

08. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் தினத்திற்கு அடிப்படை தகைமைகள் மதிப்பீடு செய்யப்படும் என்பதுடன், கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு கடமையை பொறுப்பேற்கும் தினம் நியமன தினமாக கருதப்படும்.

பொது சேவை ஆணைக்குழுவின் கட்டளைக்கு அமைய,

வைத்தியர் பீ.ஜீ மஹீபால
செயலாளர்
சுகாதார அமைச்சு

Dr. P. G. Mahipala
Secretary
Ministry of Health
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10, Sri Lanka.